# நாடாளுமன்றத் தேர்தல் 2024! கழக வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல்!



‘இந்தியா’ கூட்டணி கட்சிகளின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.கழக வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்கள், செங்கல்பட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்த பின்னர், திறந்த ஜீப்பில் ஊர்வலமாகச் சென்று வேட்பு மனு தாக்கல் செய்தார். அருகில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, வரலட்சுமி மதுசூதனன், காரம்பாக்கம் கணபதி உள்ளிட்டோர் உள்ளனர்.



திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதியில் ‘இந்தியா’ கூட்டணியின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் கே.சுப்புராயன் மாவட்ட தேர்தல் அலுவலர் தா.கிருஸ்துராஜ்யிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். இதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் கிருஷ்ணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில பொதுக்குழு உறுப்பினர் காமராஜ் ஆகியோர் உள்ளனர்.



உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க பொன்முடி தலைமையில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்திலிருந்து ஊர்வலமாகச் சென்று விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் துரை. ரவிக்குமார், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனுவைதாக்கல் செய்தார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ., மாநில மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர் இரா.இலட்சுமணன், எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா. இளந்திரையன், டி. என். முருகன், காங்கிரஸ் மாநில துணைத் தலைவர் குலாம் மொய்தீன், வி.சி.க. பொதுச் செயலாளர் சிந்தனைச் செல்வன் எம். எல். ஏ, வி.சி.க. மாநில துணை பொதுச் செயலாளர் வன்னியரசு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இராமமூர்த்தி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.




2024 நாடாளுமன்றத் தேர்தல்
‘இந்தியா கூட்டணி’
வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

## கழக இளைஞர் அணிச் செயலாளர் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரிக்கிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**27-03-2024, புதன்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | பேருந்து நிலையம், ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 2 | காலை 10.45 மணி | முத்துக்கடை பேருந்து நிலையம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 3 | காலை 11.30 மணி | பேருந்து நிலையம் அருகில், வாலாஜா, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 4 | மதியம் 12.30 மணி | பேருந்து நிலையம் அருகில், சோளிங்கர் இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| | | **மதிய உணவு இடைவேளை** | |
| 5 | மாலை 5.00 மணி | கமலா திரையரங்கம் அருகில், திருத்தணி, திருவள்ளூர் மேற்கு மாவட்டம். | அரக்கோணம் |
| 6 | மாலை 6.00 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 7 | மாலை 7.30 மணி | மணிக்கூண்டு, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | திருப்பெரும்புதூர் |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 22–03–2024.




சேலம் நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி தி.மு.க வேட்பாளர். டி. எம். செல்வகணபதி சேலம் நாடாளுமன்ற தொகுதி தேர்தல் அதிகாரி டாக்டர் பிருந்தா தேவியிடம் வேட்பு மனு தாக்கல்செய்தார். உடன் மத்திய மாவட்ட கழக செயலாளர். இரா.இராஜேந்திரன் எம். எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர். எஸ்.ஆர்.பார்த்திபன். காங்கிரஸ் ஏ.ஆர்.பி பாஸ்கர். மொழி அரசு (விடுதலை சிறுத்தைகள் கட்சி தெற்கு மாவட்ட செயலாளர்) ஆகியோர் இருந்தனர்.



திருவண்ணாமலை மாவட்டம் ஆட்சி தலைவர் அலுவலகத்தில் ஆரணி நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் அவர்கள் வேட்புமனு தாக்கல் செய்த போது எடுத்த படம்... உடன் எஸ்.பிரசாத், டி.பம்.பீர்.முகமது, வளர்மதி சுரேஷ் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் கே.இ.பிரகாஷ் மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சித் தலைவருமான ராஜகோபால் சுன்கரா அவர்களிடம் தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்தார். நிகழ்வில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆ.செந்தில்குமார், க.சின்னையன், மாவட்ட கழக பொருளாளர் ப.க.பழனிசாமி, வழக்கறிஞர் மா.சு.ராதாகிருஷ்ணன் உடனிருந்தனர்.



இந்தியா கூட்டணி சார்பில் பொள்ளாச்சி நாடாளுமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் ஈஸ்வரசாமி பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்தில் சப்கலெக்டரும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியுமான கேத்தரின் சரண்யாவிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் தளபதி முருகேசன்,தொ.அ.ரவி மற்றும் பத்மநாபன்,காங்கிரஸ் மாவட்ட செயலாளர் தென்னரசு, கொ.ம.தே.க. மாநில துணைப் பொதுச் செயலாளர் நித்தியானந்தன், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர் ஆகியோர் உடன் இருந்தனர்.




நாகை நாடாளுமன்றத் தொகுதியின் ‘இந்தியா’ கூட்டணி கட்சியின் நாகை நாடாளுமன்றத் தொகுதி மற்றும் நாகை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் அறிமுகம் – செயல் வீரர்கள் கூட்டம் நாகையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாடாளுமன்றத் தொகுதியின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் வை.செல்வராஜ் வாக்குக் கேட்டு பேசினர். உடன் நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவருமான என்.கௌதமன், திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. மாநில விவசாய அணிச் செயலாளரும், டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே.எஸ்.விஜயன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ். தி.மு.க. சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் ஜெகவீரபாண்டியன், வி.ஜெயபிரகாஷ், கே.ஆர். போஸ் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் உள்ளனர்.